**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**எம்.சி.ஓ.பி.எண்.551/2019**
**நாள் 13/08/2024, செவ்வாய்க்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பின் 1-வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10-வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் - நவநீத கிருஷ்ணன் | த/பெயர் - பச்சையப்பன் |
| வயது - 49 | தொழில் - |
| விலாசம் - பெருமாள் கோயில் தெரு, அழிஞ்சிவாக்கம், இருளிப்பட்டு, சென்னை-67. | |

**முதல் விசாரணை** **(PW1)**

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் அஜாக்கிரதையாலும், கவனக்குறைவாலும் ஏற்படுத்தப்பட்ட விபத்துக்கு 1மற்றும் 2 ஆம் எதிர்மனுதாரர்களிடமிருந்து இழப்பீடு கோரி மனு தாக்கல் செய்துள்ளேன். இவ்வழக்கு குறித்த விவரங்கள் அனைத்தும் பிரமான வாக்குமூலத்தின் வாயிலாக கூறியுள்ளேன். என் தரப்பு சான்றாவணமாக ம.சாஆ.1 முதல் ம.சா.ஆ. 6 வரை குறியீடு செய்ய வேண்டுகிறேன். மனுப்படி தீர்ப்பாக வேண்டும்.

1. (1). முதல் தகவல் அறிக்கை நகல் **ம.சா ஆ 1** ஆகவும்,
   (2). வாகன பதிவு சான்று நகல் **ம.சா ஆ 2** ஆகவும்,
   (3). காப்பீட்டு சான்று நகல் **ம.சா ஆ 3** ஆகவும்,
   (4). ஓட்டுநர் உரிமம் நகல் **ம.சா ஆ 4** ஆகவும்,
   (5). மருத்துவ விடுவிப்பு அறிக்கை நகல் **ம.சா ஆ 5** ஆகவும்,
   (6). காயச்சான்றிதழ் நகல் **ம.சா ஆ 6** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**2ம் எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து எந்த தேதியில் எப்போது நடந்தது என்றால் 21.12.2016 அன்று மாலை 07.30 மணிக்கு ஜனப்பச்சத்திரம் கூட்டு சாலை சாமி & சன்ஸ் கடை அருகில் நடந்தது. அந்த சமயத்தில் என் குழந்தையை டியுசனில் இருந்து அழைத்து வர சென்று கொண்டிருந்தேன்.

சாலை ஓரமாக நடந்து சென்றுக்கொண்டிருந்த போது டாடா மேஜிக் வேன் என் பின்னால் வந்து மோதிவிட்டது. டாடா மேஜிக்கின் பதிவு எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியும் AP 26TD 0365 ஆகும். விபத்தில் எனக்கு தலையில் அடிப்பட்டது. காயம் பட்டவுடன் என்னை இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். அங்கு ஒரு வாரம் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். அறுவை சிகிச்சை நடத்தப்பட்டதா என்றால் இல்லை. எலும்பு முறிவு ஏற்ப்பட்டதா என்றால் இல்லை. தலையில் அடிப்பட்டதால் வலிப்பு வந்தது. சிறு வயதில் இருந்தே எனக்கு வலிப்பு நோய் இருந்ததா என்றால் இல்லை. விபத்து சமயத்தில் எனக்கு 41 வயது. அப்போது கூலி வேலை செய்திருந்தேன். தினம் ரூபாய் 800/- தினக்கூலியாக வாங்கிவந்தேன். எனது வயது, வருமானம், தொழில் ஆகியவற்றை காண்பிக்க ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து குறித்து நான் தான் காவல் நிலையத்தில் புகார் அளித்தேனா என்றால் நான் கொடுக்கவில்லை. என் வீட்டில் உள்ளவர்கள் கொடுத்தார்கள். ஒருநாள் தாமதமாக தான் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். விபத்து சம்மந்தமாக வேறு ஏதேனும் குற்றவியல் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய கவனக்குறைவாலும் அஜாக்கிரதையாலும் தான் விபத்து ஏற்ப்பட்டது என்றால் சரியல்ல. தற்போது நான் வேலைக்கு எதுவும் செல்லவில்லை. மனுவில் பல்வேறு தரப்பில் கேட்கப்பட்டுள்ள தொகை மிக அதிகம் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்ப்பட்ட காயம் சொர்ப்ப காயம் தான் என்றும் அது சரியாகிவிட்டது என்றும் அதனால் 2ம் எதிர்மனுதாரர் எந்தவித இழப்பீடும் தர கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல. மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப் பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பொன்னேரி.**